**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 334/2025** |
| Prosecution witness | : | P.W. 4 |
| List of witness | : | L.W. 4 |
| Name | : | கருணாநிதி |
| Father's /Husband Name | : | சிவசாமி |
| Village | : | மஞ்சகுடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 38 |
| Occupation | : | விவசயாம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 26th day of May 2026. A1 present. A2 died.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர் ஆவார். 2ம் எதிரி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் இல்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 02.10.2024 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் மஞ்சகுடி நெய்குப்பை சாலையருகே நானும் பிரபாகரன் என்பவரும் நின்று பேசிக் கொண்டிருந்தோம் என்றும், அப்போது குடவாசல் போலிசார் 1 ஆம் எதிரியின் வீட்டு முன்பு விசாரித்துகெண்டிருந்தார்கள் என்றும், நாங்கள் என்னவென்று பார்த்த போது கடந்த 30.09.2025 ஆம் தேதி 1 ஆம் எதிரிக்கும் அ.சா.1 க்கும் நடந்த சண்டை சம்பந்தமாக

விசாரணை நடத்தி வருவதாக சொன்னார்கள் என்றும், எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் சம்மதித்தோம் என்றும், குடவாசல் போலிசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் 1ம் எதிரியுடன் சமாதானம் செய்துக் கொண்டதால் ஆஜர் 1ம் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

**மறுவிசாரணை** இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 21:16:10 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.